அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்).

தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்பு.

சட்டமன்ற மேலவை நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று எடுத்துக்கொள்வதாக இருந்த பிற்பட்டோர் நலன் பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம் நாளை காலை எடுத்துக் கொள்ளப்படும்.

மறைந்த உறுப்பினர் திரு. பிச்சை அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த அவை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் நாளை 30—4—1986 புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

முற்பகல் 10.02

2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

209. கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்கு 23—3—1986 முதல் 1—4—1986 முடிய உள்ள காலத்திற்குச் செலுத்தக் கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து உள் துறையின் 7—3—1986 ஆம் நாளிட்ட 582 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS